**தலைப்பு 167 – விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2019 யூலை 23 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 17 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்தம் மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய

வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிவருவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறமுடியாதுள்ளது

(ஆ) விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

அமைச்சினால் பின்வரும் நிதிக்கூற்றுக்கள், கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் உரிய திகதியில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வருடாந்த நிதிக்கூற்றுக்கள்** | | |
| 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவை 02 மாத தாமதத்தின் பின்னர் 2019 மே 06 இலேயே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்குகளின் விபரங்களைப் பெற்றுக்கொள்வதிலுள்ள சிக்கல்கள் காரணமாக இக் கணக்குகளை தயாரித்தல் 2018 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட முடியாதிருந்தது. |
| **(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று** | | |
| 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க | ஏற்பாடுகளின் பிரகாரம் இணக்கக்கூற்றை கணக்காய்விற்குச் | -மேற்படி- |

| | |
|---|---|
| உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணைக்கக்கூற்று 2019 பெப்ரவரி 28 இற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவை 2019 யூன் 20 வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றிலுள்ள ஆரம்ப மீதிகளின் பிரகாரம் பயணிகள் வாகனங்களின் ரூபா 186,370,094 மீதியொன்று சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அரசாங்க சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யும் கோவையின் பிரகாரம் இது ரூபா 109,450,000 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 76,920,094 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | சொத்துக்கள் சரியான பெறுமதியில் கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | அப் பெறுமதியில் காணப்படுகின்ற தவறு விடயத்தில் எதிர்காலத்தில் அதனை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யும் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களிற்கு திறைசேரிப் பிரதிகளின் பிரகாரம் கொண்டுவரப்பட்ட பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ரூபா 33,757,456 தொகையான வருமானமற்ற பெறுவனவுகள் காட்டப்பட்டிருந்தன. எனினும் மாதாந்த கணக்குப் பொழிப்புக்கள் மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம் இது ரூபா 32,717,179 தொகையாக காணப்பட்டதனால் ரூபா 1,040,277 வேறுபாட்டை சுட்டிக்காட்டுகின்றது. | வருமானமற்ற பெறுவனவுகள் சரியாக காட்டப்பட வேண்டும். | காசாக பெறப்பட்ட வருமானமற்ற பெறுவனவுகள் திறைசேரிப் புத்தகங்கள் மற்றும் மாதாந்த கணக்குப் பொழிப்புக்களின் பிரகாரம் சரியாக காணப்படுகின்றது. |
| (ஆ) ரூபா 113,640 வைப்பு | முதலீட்டு | இந்த விடயங்களுடன் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுவனவுகள் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் சரியாக காட்டப்பட வேண்டும். | இணங்க முடியாதிருந்தது. வைப்புப் பெறுவனவுகள் தொடர்பான ரூபா 113,640 தொகை வருமானமற்ற பெறுவனவுகளாக காணப்படுகின்றது. |
| (இ) | செயற்பாடுகளிற்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் பெறுமதி மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் ரூபா 2,162,450 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | செயற்பாடுகள் மற்றும் முதலீடுகள் சரியாக காட்டப்பட வேண்டும். | கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் ரூபா 2,162,450 வேறுபாடு காணப்படவில்லை. |
| (ஈ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் முதலீடுகளிலிருந்து உருவாகிய பணம் எதுவும் காணப்படவில்லையென சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனினும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் முற்பணங்களின் ரூபா 5,768,519 தொகையான அறவீடுகள் காணப்பட்டன. | முற்பணங்களின் அறவீடு (குறுக்குப் பதிவுகளுடன்) முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலாக காட்டப்பட வேண்டும். | கணக்கிற்குரிய காசுப்பாய்ச்சல் கூற்றில் அத் தொகை உள்ளடக்கப்படக் கூடாததுடன் இது நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (உ) | முதலீட்டு நடவடிக்கைகளிற்காக செலவிடப்பட்ட பணம் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ரூபா 65,014 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் இதற்கு மேலதிகமாக முற்பணக் கொடுப்பனவு ரூபா 7,194,182 தொகையாக காணப்பட்டது. | முதலீட்டு நடவடிக்கைகளிற்கான செலவினம் சரியாக காட்டப்பட வேண்டும் | தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட முற்பணக் கணக்குகளின் பெறுமதி பிழையானதாகும். |
| (ஊ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் காசில் காணப்பட்ட தேறிய வேறுபாடு ரூபா 189,850 ஆக காட்டப்பட்டிருந்தது. எனினும் காசில் தேறிய வேறுபாடு அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. | காசில் காணப்படும் தேறிய வேறுபாடு சரியாக காட்டப்பட வேண்டும். | அவ் வேறுபாட்டிற்கான காரணமானது மேற்படி ரூபா 189,850 தொகையான நாட்குறிப்பு பதிவு 167011 இற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததாகும். உண்மையானதாக காணப்பட்டிருக்காத போதிலும் காசில் காணப்பட்ட தேறிய வேறுபாடாக இது காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. |

### 1.6.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 8,015,792 மற்றும் ரூபா 3,913,585 தொகையான முறையே அலுவலக உபகரணம் மற்றும் வீட்டுத் தளபாடம் என்பன இன்னொரு அமைச்சிற்கு இடம்மாற்றப்பட்டிருந்தன. எனினும் சொத்துக்கள் இடம்மாற்றப்பட்டதை உறுதிப்படுத்தும் சான்றெதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை இடம்மாற்றுதல் தொடர்பான ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணப்பட வேண்டும். | வீட்டுத் தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் என்பன விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சிற்கு இடம்மாற்றப்பட்டிருந்ததுடன் அவற்றிற்கான பெறுகைக் கட்டளைகள் முன்னாள் பிரதான கணக்காளரால் வழங்கப்பட்டிருந்தன. |